**சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் (எஸ்ஏபிபி) - 2020**

சிறுநிலவுடமையாளர் வேளாண்மை தொழில் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் (எஸ்ஏபிபி) 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூன் 26 ஆந் திகதிய 2000001843 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 9.03 ஆம் பிரிவு, 2017 நவம்பர் 21 ஆந் திகதிய 2000001984 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2019 மே 16 ஆம் திகதிய 2000002639 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், விவசாய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் எஸ்ஏபிபி இற்காக ஸ்தாபிக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. வணிகம் சார்ந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமையில் ஈடுபட்டுள்ள 57,000 சிறுநிலவுடமையாளர் குடும்பங்களின் வருமானம் மற்றும் உணவு தரத்தை நிலையாக அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் செயற்பாடுகள் வணிக பங்குடமைக்கான அணுகல், கிராமிய நிதிக்கான அணுகல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கை உரையாடல் ஆகிய மூன்று கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகிறது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 17,170 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 105.03 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 8,892 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 54.4 மில்லியன் தொகை விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. ரூபா 8,278 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 26 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பயனாளியின் பங்களிப்பைக் கணிப்பீடு செய்வதற்காக நிகழ்ச்சித்திட்டத்தால் முறையான அறிக்கையிடல் முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்ட பயனாளியின் பங்களிப்பை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது. | 73.7 | பின்பற்றப்படும் நடைமுறைகள் IFAD உடன் இணங்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட அமுல்ப்படுத்தல் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. | பயனாளியின் பங்களிப்பை கணிப்பீடு செய்வதற்கு செயற்திட்டத்தால் சரியான முறை இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்ட மூன்று வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கவில்லை. | இந்த இரண்டு வாகனங்களின் உரிமைத்துவமும் 2020 மே 29 இல் எஸ்ஏபிபி இற்கு மாற்றப்பட்டு, விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடம் மதிப்பிடுவதற்கு கோரப்பட்டுள்ளது. மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்ததும், கணக்குப் புத்தகத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிமைத்துவத்தை பெற்ற பின்னர் இந்த மூன்று மோட்டார் வாகனங்களினதும் பெறுமதி கணக்கிற்கு எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுக்களில் செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்களை மதிப்பிடுவதற்கு தரப்படுத்தப்பட்ட மதிப்பீட்டு முறை பயன்படுத்தப்படாமல் பல்வேறு முறைகளில் சொத்துக்கள் மதிப்பிடப்பட்டிருந்தன. | 72.7 | எஸ்ஏபிபிக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீடு செய்து கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களின் உண்மையான பெறுமதி அதே மதிப்பீட்டு முறையைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 756 | ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக செயற்திட்டம் அத்தகைய பொருள் மெய்மையாய்வு சபையை நியமனம் செய்திருக்கவில்லை. | எதிர்வரும் மாதங்களில் BOS ஐ மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | ஒவ்வொரு நிதியாண்டிற்கும் பொருள் மெய்மையாய்வை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இச் செயற்திட்டம் 21,823 பயனாளிகளுக்குநன்மைகளை வழங்குவதற்காக 25 4P உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,778 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், எதிர்பார்த்த பயனாளிகளில் 63 சதவீதத்தையும் ஒதுக்கப்பட்ட நிதியில் 19 சதவீதத்தையும் | பெரும்பாலான செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமல் பாதியில் உள்ளதுடன் சில பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தற்போது இணங்கப்பட்ட 77% விவசாயிகள் பௌதீக ரீதியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களில் 64% விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. | PMU ஒரே நேரத்தில் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 340 மில்லியன் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி 13,871 பயனாளிகளுக்கு மாத்திரமே இச் செயற்திட்டம் நன்மைகளை வழங்கியிருந்தது. | இணங்கப்பட்ட மானியத் தொகையில் 27% தற்போது இணங்கப்பட்ட 49% விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான கூறு 02 - ”கிராமிய நிதிக்கான அணுகல்” இன் கீழ் GOSL நிதியிலிருந்து ரூபா 74 மில்லியனை செயற்திட்டமானது ஒதுக்கியிருந்தது. கிராமிய நிதிச் சேவைகளை பயனாளிகளுக்காக நிலையான முறையிலும் மலிவு விலைவீதத்திலும் அணுகுவதை எளிதாக்குவதே இக் கூறின் நோக்கமாகும். எனினும், பாதிடப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது எந்தவொரு தொகையும் கடனுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது IFAD கடன் லிங்கை (credit ling) பூர்த்தி செய்து RF இலிருந்து (73.9 மில்லியன் மாத்திரமே) சிறிய ஒதுக்கீட்டைக் கோர திட்டமிட்டிருந்த போதிலும் கள நடவடிக்கைகளின் போது கொவிட் கட்டுப்பாடுகள் மற்றும் வங்கிகளில் பதவியணியினர் பற்றாக்குறை காரணமாக ஒதுக்கப்பட்ட தொகையைப் பயன்படுத்த முடியாதிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டில், விவசாயிகள் RF இன் கீழ் பதிவு செய்கிறார்கள், தற்போது மீள்நிதியிடலிற்காக CBSL இற்கு ரூபா 284 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட செயற்பாடுகள் முறையாக கண்காணிக்கப்பட்டு துரிதப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட அலுவலகம் 2020 மே 22 இல் இராஜகிரியவில் வாடகை கட்டிடத்தில் இருந்து வேறொரு வாடகை கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. பழைய கட்டிடத்தின் குத்தகை ஒப்பந்தம் முடிவடைந்ததால், செயற்திட்டமானது ரூபா 3.2 மில்லியன் மீளளிக்கத்தக்க வைப்பை பதிவழிக்க வேண்டியிருந்தது. மேலும், அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட்டதால், செயற்திட்டத்திற்கு இனி தேவைப்படாத ரூபா 6.8 ரூபா மில்லியன் பெறுமதியான அலுவலக கட்டடத்தின் பகுதிகள் இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டது. செயற்திட்டத்தில் இந்த நிகழ்வின் தாக்கம் செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணானதாகும். | நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் வரிசை அமைச்சால் வழங்கப்பட்ட உத்தரவுகளை பின்பற்ற வேண்டும். எனினும் அனைத்து சுகாதார நடவடிக்கைகளும் இடமாற்றத்தின் போது எஸ்ஏபிபி ஆல் பின்பற்றப்பட்டது. 2019 ஆம் ஆண்டுக் கணக்காய்விற்கான முன்னைய அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளவாறு முன்னணி நிகழ்ச்சித்திட்ட முகவர் - விவசாய அமைச்சால் வழங்கப்பட்ட ஆலோசனையுடன் இணங்குவதற்கும், அரசாங்கத்திற்கு ஏற்படும் நட்டத்தை குறைப்பதற்கும் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்கு ஏற்படும் நட்டங்கள் மற்றும் சேதங்களை குறைப்பதற்கு தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். |